ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# சங்க இலக்கியத்தில் சமூகவியற் கோட்பாடுகள்

**முனைவர் ஈ.யுவராணி**
நெறியாளர், இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை,
பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரி கோபிசெட்டிபாளையம்.

**ஆய்வுச்சாரம்**

*அகம் என்பது ஆழ்கடல் :புறம் என்பது வான்வெளி. அகத்தில் உள்ளனவெல்லாம் அறிய நீள் நினைவும் நெடும் பயில்வும் வேண்டும். உற்று நோக்கிகள், உருப்பெருக்கிகள், இயங்குதிணை நிலைத்திணையாய உயிரறிவுகள், ஆழ்கடல் ஆய்வுக்குத் தேவை போலவே அகப்பொருள் ஆய்வுக்கும் இலக்கண நோக்கிகளும், உயிரறிவுகளும் வேண்டும். புறத்திணை ஆய்வில் கருத்துப் புலனினும் காட்சிப்புலன் மிகுதியும் இடம் பிடிக்கும்.அகம்புறம் என்பன வாழ்வின் இரண்டு பக்கங்கள்.*

***கருச்சொற்கள் :*** *சங்க இலக்கியம், சமூகம், இனவரைவியல், மற்றும் இனக்குழு வாழ்வியல் முறை*

*விலங்குகள் ஒன்று சேர்ந்து கூட்டமாகலாம். பறவைகள் ஒருங்கு திரண்டு கூட்டமாகலாம். மாந்தர் சமூகம் என உருவாகலாம.; சமூகம் என்பது பரிணாமத்தின் மேற்படிநிலை பண்பாட்டை பெற்றுள்ள கூட்டமே சமூகம் சமுதாயம் எனப்பெறும். இவை அயல்மொழிச்சொற்களே எனினும் சமுதாயம் என்பதிலுள்ள ஆயம் தமிழ்ச்சொல்லே ஆகும்.*

*“ஒரே குறிக்கோள். நோக்கம் கருத்து நம்பிக்கையோடு செயற்ப்படும் மனிதத்திரளைச் சமுதாயம் எனலாம்”1 என்று ளுழஉநைவல என்று ஆங்கிலச்சொல்லுக்கு அகராதி விளக்கம் கூறும். தொடர்ச்சியான வாழ்க்கைபோக்கும் பண்பாடும் உடைய மக்களைக் கொண்டதாக அமைவது ஒரு சமூகம் என டேவிட்டிரஸ்லர் என்ற சமூகவியல் அறிஞர் கருதுகின்றார்.*

*முட்டை, குஞ்சு, குட்டி, கன்று, பிள்ளை, என்ற நிலைகளில் இருந்து உயர்வடையும் வளர்ச்சியைப் பரிணாமம் என்றனர். உயிர்வளர்ச்சியில் ஒரு பரிணாமம் இருப்பது போலவே சமூக வளர்ச்சியிலும் ஒரு பரிணாமம் உள்ளது என ஆகஸ்டகாம்ட் கருதினார்”2. இவரைத் தொடர்ந்து சமூக வளர்ச்சியில் பரிணாமக் கொள்கையைப் பொருத்திப்பார்க்கும் முயற்சி தோன்றியது. “ஒரு சமூக வளர்ச்சியில் ஒருவன் தன் நினைவின்றிப் பங்கேற்பவனாக இருக்கும்போது அவனே பார்வையாளனாகவும் இருப்பதனைப் ‘பங்கேற்கும் பார்வையாளன்’ என்று பிறர் கூறுவதை வியந்து போற்றுகின்றார”3. மேலும் “மனிதன் எப்பொழுதும் ஏதாவது ஒரு சமூகத்தில் உறுப்பினராகவே இருக்கிறான் அவ்வாறு இல்லாமல் அவன் வாழ இயலாது அவன் சார்ந்த அந்தச் சமூகம் தனிச்சிறப்புடையதாக இருக்க வேண்டும் எனநான் எண்ணவில்லை. அது ஓர் அரசாகவோ இனக்குழுவாகவோ,மனிதன் பங்கு பெறும் எந்த ஒன்றாகவோ இருக்கலாம். மனிதன் சமூகமாக வாழத் தகுதி படைத்தவன் மட்டுமல்லன் அவ்வாறு வாழ்வதற்குரிய உள்ளார்ந்த தேவையும் உடையவன். உணர்வு மிகுதி அறிவின்தேர்ச்சி வாழ்வின் தேவைக்கான சரக்குகள் தன் உரிமையை பயன்படுத்தும் வாய்ப்பு தன்னை முழுமையாக்கிக் கொள்வதில் முன்னேற்றம் ஆகியவற்றைச் சமூகம் என்பது இல்லாமல் நினைத்துப் பார்க்க முடியாது”4 .என்றுபாஸ்கல் கூறுகின்றார்.*

*சமூக அமைப்பின் ஒரு விழுமிய நிறுவனமே குடும்பம் என்ற அமைப்பில் அகவினைகளும் புறவினைகளும் அடங்கியுள்ளன. அவற்றின் வெளிப்பாட்டிலேயே பண்பாட்டில் தோற்றம் வளர்ச்சி ஆகியன அடங்கியுள்ளன.*

***சங்க காலச்சமூகம்***

*சங்ககாலம் என்பது கி.மு. நூற்றாண்டுகளிலேயே தொடங்கிவிடுகிறது. தொல்காப்பியரின் காலத்தை கி.மு.ஆறாம்நூற்றாண்டு ஏழாம்நூற்றாண்டு என்று கருதும் நிலை ஆய்வுலகில் தோன்றியுள்ளது. இதற்கு ஆதாரமாகத் தொல்காப்பியம் காட்டும் இனக்குழுமக்களின் வாழ்க்கைப் பண்பாட்டுச்சுவடுகளைக் கூறலாம்.*

*தலைவியின் உடல்மெலிவு கருதித்தாய் கட்டுப்பாட்டிலும் கழங்குபார்த்தாலும், வேலனை அழைத்து வெறியாடலும் அகத்திணை நிகழ்வுகள் தொன்மைகாலக் காலச் சமூகப் பண்பாட்டு மரபுகளை காட்டுவன. இதை போலப் புறத்திணை பற்றித் தொல்காப்பியர் கூறுவனவற்றுள், அவர்களுக்கு முற்பட்ட காலஎச்சங்கள் மிகுதியாக உள்ளன. ஊர்கொலை ஆகோள், பூசல்மாற்று,எரிபரந்ததெருத்தல் ஆகிய நூழிலாட்டு துறைகள் பண்டையக் கால மரபு எச்சங்களை ஆகும்.அக்காலச் சிற்றூர்குடி மரபுஒன்றைப் புறப்பாடல மிகத்தெளிவாக காட்டுகிறது.*

***"குரவேதளவே குருந்தே முல்லையென்று***
***இந்நான் கல்லது பூவுமில்லை***
***கல்லே பரவி னல்லது***
***நெல்லுகுத்துப்பரவும் கடவுளும் இலவே"5***

*இச்செய்யுள் அயல்நாகரீகக் கலப்பற்ற பண்டையத் தமிழ்ச் சமூக வாழ்வைக் காட்டுவது சூடும்பூவும் சமைக்கும்கூலமும், உண்ணும் உணவும், இந்நிலத்திற்கே உரியன. வழிபாடு என்பது நடுகல்லை அன்றிபிறதெய்வங்களை இல்லை என்பதைத் தற்செருக்கோடு கூறக் காண்கிறோம்.சமூகத்தையும். இதற்கே உரிய பண்பாட்டையும் சார்ந்தவர்யாம் என்று சொல்லிக் கொள்வதில் பெருமிதம் பூண்டது அக்காலச் சமூகம்.*

***"பார்ப்பன மகனே பார்ப்பன மகனே***
***செம்பூ முருக்கின் நன்னார் களைந்து***
***மருந்து முண்டோ மயலோ இதுவே"6***

*அகவாழ்வைப் போலவே புறவாழ்விலும் தமிழ்ச்சமூகம் தனக்கெனதனிவாழ்நெறியைக் கொண்டிருந்தது. இதற்கான ஓர் அரிய பதிவு புறநானூற்றில் காணக்கிடைக்கின்றது.*

***செருப்புகள்றெடுக்கும் விசயவெண்கொடி***
***அறங்குறித் தன்று பொருளா குதலின்"7***

*என்று கூறப்படுவதற்கு ஔவைதுரைசாமிப்பிள்ளை அவர்கள் எழுதியுள்ள விளக்கம் நோக்கத்தக்கது விளக்கம் வருமாறு.*

***"அந்தணர்களே! எங்கள் தலைவன் கணங்கொண்ட***
***நான்மறைகளிற் குறிக்கப்படுவது அன்று***
***புறத்துறையாகிய பொருளாதலால் ஒழுக்கங்கூறும்***
***அறநூல்களில் குறிக்கப்படுவதுமன்று"8***

*இதனால் தமிழர் அகவாழ்விலும் புறவாழ்விலும் கொண்டிருந்த சமூகவியற் கோட்பாட்டைத் தெளிவுற அறியலாம். வைதிகநெறிக்கு மாறுபட்ட சமூகமாகத் தமிழர் சமூகம் இருந்தமை நன்குணரப் பெறுகின்றது.*

***பொருளதிகாரம் கண்ட சமூகம்***

*வேதகாலநாகரிகம் ஒருபொருள் அதிகாரத்தைப் படைக்கவில்லை. சங்ககாலம் பொருளதிகாரம் என்ற சமூகவாழ்க்கை ஆவணத்தைப் படைத்துகாட்டியுள்ளது. இயற்கைக்கும் அந்த சமூகத்திற்கும் இருந்த உறவுபோல ஏற்றஎச்சமுகத்திற்கும் இயற்கைக்கும் உறவில்லை. காடும் நாடும் கடலும் விலங்கும் பறவையும் மரமும் செடியும் கொடியும் வானும் நிலவும் பழந்தமிழ்மக்களின் வாழ்க்கைக்கு எவ்வளவு ஆதாரமாக இருந்தன என்பதை நாம் அறிகின்றோம்.*

*சுற்றூர்ப் பெண் ஒருத்தியின் காதலுக்கு பெற்றோர் ஏற்கவில்லை. அவள் நெஞ்சைக் கொதிப்பைத் தோழி உரைக்கின்றாள்.*

***"சிறுகுடி யீரே சிறுகுடி யீரே***
***வள்ளிகீழ் வீழா வரைமிசைத் தேன்தொடா***
***கொல்லை குரல்வாங்கி ஈனா மலைவாழ்நர்***
***அல்லபுரிந் தொழுக லான்"9***

*என்று அவள் கூறுகின்றாள். காதல் அர்த்தம் அன்பு காதல் ஏற்கப்படாது நிலம் விளையாத தேனடை கொள்ளாத மக்கள் தம் அன்பையும் கசப்பையும் வெறுப்பையும் துயரத்தையும் இயற்கையோடு இவ்வாறு பகிர்ந்து கொள்வர்*

***"கருங்கால் வேங்கை வீயுகு துறுகல்***
***இரும்புலிக் குருளையின் தோன்றும் காட்டிடை***
***எல்லி வருநர் களவிற்கு***
***நல்லை அல்லை நெடுவெண்ணிலவே"10***

*எனத்தோழி நிலவை நோக்கி நெடுவெண்ணிலவே! என் தலைவியின் காதலன் ஊர் அறியாமல் களவுக் காதலில் தலைவியைக் காணவருங்கால் நீ ஒளி வீசுகின்றாயே நீ நல்லை அல்லை என்கிறாள் புள்ளும் மலரும் வண்டும் விலங்கும் செடியும் கொடியும் காதலைப் புலப்படுத்தும் உள்ளுறைப் பொருள்கள் ஆகின்றன. அணிலாடுமுன்றில், பிடியூட்டிப் பின் உண்ணும் களிறு, மாம்பழத்தைக் கௌவ்வியவாளைமீன், செம்புலப் பெயல் நீர்,வரைபாயும் மந்திதன்னிழலைத் துணைக்களிக்கும் கலைசார்ற் சிறுகோட்டுப் பெரும்பழம் பூத்தகரும்பு காய்கறிகள் பற்பல இயற்கையின் இன்றும் கொள்ளபெறுகின்றன.இதனால் அன்றைய சமூகம் ஓர் இயற்கைநெறிச்சமூகம் என்பதை அறியலாம்.*

*குடும்பம் என்னும் நிறுவனம்*

*மனித நாகரீகத்தின் விழுமிய அடையாளம் குடும்பம் என்ற நிறுவனம். சமூகம் படிப்படியாக வளர்ந்த நாகரீகவளர்ச்சியில், ஆடைகளில் மேம்பாடும் நாணம் கலந்தமறையை புணர்ச்சியும், குழந்தைவளர்ப்பும், குடும்பத்திற்குரிய பொருளாதாரத் தேடலில் உண்டாக்கிக் கொண்ட பல தொழில்களும் மணவினைகளும், சடங்குகளும் குடும்ப அமைப்பை மேலும் வலிவும் பெறச்செய்தன. இவற்றில் தொழில், உற்பத்தி, ஊதியம் ஆகியவை ஆணக்குரியனவாகவும், உணவுசமைத்தல், பிள்ளைப்பேறு, வளர்ப்பு ஆகியவை பெண்ணுக்குரியனவாகவும் அமைந்தன.*

***"வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்***
***மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரென***
***நமக்குரைத் தோரும் தாமே***
***ஆழாஅல் தோழி அழுங்குவர் செலவே"11***

*என்ற செய்யுள் குடும்பப் பொறுப்பில் ஆண்பெண் பங்கீட்டை காட்டும் உடல் வலிவும், பொருள்தேடலும் இயற்கையாகவே ஆணைமேனிலையில் உரிமை கொண்டாட வைத்த சமூகம் பெண்ணை வீட்டளவிலான புலக்கம் வெளியுலகத் தொடர்பின்மை பிள்ளைப்பேறு வளர்ப்பு ஆகியவற்றால் ஆணுக்கு உட்பட்டவளாகவே ஆக்கியது.*

***"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே***
***சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே"12***

*எனக்கடமைகள் வரையறுக்கப்பட்ட நிலையில் பெண்ணின் தாய்மைப்பேறு மிக உயர்ந்ததாகக் கருதப்பட்ட நிலையிலும் அவளுக்கிருந்த ஒழுக்கவரையறைகள் ஆணுக்கில்லை எல்லாச் சமூகங்களிலும் இந்தநிலை இருந்தமையினை எங்கெல்ஸ் குறிப்பிடுகின்றார்.*

*பரத்தமை என்பது ஆணுக்குரிய பண்பாக போனநிலையில் அவன் இச்சைக் காட்படும் பெண்பரத்தை எனப்பட்டாள். இச்சொல்லைச் சரியாகப் புரிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும் பரந்துபட்ட ஒழுக்கம் உடையவன் என்ற பொருளே தவிர ஒழுக்கம் மற்றவள் என்ற பொருளில்லை பலருடன் உறவுகொள்பவள் என்றும் பொருளில்லை ஊரில்பல இடங்களிலும் இயல்பாகச் சென்றுவரும் அவள் தலைவனோடு ஆற்றில்நீராடுவாள். வீதியில் தலைவனின் மகனைக்கண்டு அன்புமொழி கூறுவாள்.தலைவியைப் புதல்வன் தாய் என எள்ளிநகையாடுவாள் காவிரியின் வெள்ளம் போல நான் தலைவனை இழுத்துக் கொண்டுபோவேன் என்று சூளுரைப்பாள்.தலைவன் பரத்தை ஒழுக்கம் மேற்கொள்ளும்வழக்கம் சங்கச் சமூகத்தில் இருந்தது.*

*சங்கச்சமூகத்தில் தனிகுடும்பம் கூட்டுக்குடும்பம் என்றும் இருவகைக் குடும்பங்களும் இருந்தன.*

***"மறியிடைப் படுத்த மான்பிணை போலப்***
***ஈனும் உம்பரும் பெறலருங் குரைத்தே"13***

*என்பது தனிக்குடும்பத்தின் ஒப்பற்ற ஓவியம் இக்காட்சியைக் கண்டு மகிழ்ந்த செவிலி கூற்றாக அமைந்தது இப்பாட்டு.*

**"வாழுநாளோடு யாண்டுபல உண்மையின்**
**முன்றிற் போகா முதிர்வினள் யாயும்"*14***

*எனத்தாயின்நிலை கூறப்படுகின்றது. "அகன்துறை ஊரனும் வந்தனன் சிறந்தோன் பெயரன் பிறந்தமாறே"15 என்றும் "மேதக்க எந்தை பெயரனை யாம் கொள்வேன்"16 எனப்பேரன் பற்றிக் கூறப்படும். தந்தையின் பெயரை மகனுக்கு இடுவதுபோலத் தாயின்பெயரை மகளுக்கு இட்டதற்கான குறிப்பில்லை.*

**அடிக்குறிப்புகள்**

1. ***A number of persons associated to gether by some common interest or purpose united by a common vow, holding the same belief or opinion, following the same trade or profession etc. The Oxford dictionary, Vol.3,p.359-60.***
2. ***Fundamentals of Sociology, Pascal Gispert,p.4***
3. ***Ibid,p.5***
4. ***Ibid,p.56***
5. ***புறநானூறு, ஔவை துரைசாமிப்பிள்ளை உரை, செய்யுள் 335.***
6. ***குறுந்தொகை, 156***
7. ***புறநானூறு, ஔவை துரைசாமிப்பிள்ளை உரை, செய்யுள் 362.***
8. ***மேலது 364.***
9. ***கலித்தொகை, 39:11-14***
10. ***குறுந்தொகை, 47.***
11. ***குறுந்தொகை, 135.***
12. ***புறநானூறு, 312:1-2***
13. ***ஐங்குநூறு, 401.***
14. ***புறநானூறு,159:1-5***
15. ***நற்றிணை,40:12.***
16. ***கலித்தொகை, 81:35.***
17. ***புறநானூறு, 81, 82, 287, 289.***

********* ********* ********** ********* ********* ********** ********** **********